3. கவன ஈர்ப்பு

(அ) கோவை மாநகரில் சிறு வியாபாரிகள் கடை வைக்க மாநகராட்சி மறுத்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கவன ஈர்ப்பு. திரு. கே. சுப்பராயன் அவர்கள் ஒரு அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. சுப்பராயன்.

***திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “சென்னை உயர்நீதிமன்ற ஆணைக்கு விரோதமாக கோவை மாநகரில் ராஜவீதி, உக்கடம் பகுதிகளில் நடைபாதை சிறு வியாபாரிகள் கடை விரித்து வியாபாரம் செய்ய கோவை மாநகராட்சி மறுப்பது குறித்த” அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை

கோவை மாநகர நடைபாதை வியாபாரிகளுக்கு இடம் ஒதுக்கீடு செய்வது குறித்து, சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டதன்படி, இட ஒதுக்கீடு செய்ய, கோயம்புத்தூர் மாநகராட்சி மன்ற ஒப்புதல் 16-4-96-ஆம் நாளது 156-ஆம் எண்ணுள்ள தீர்மானத்தில் முடிவெடுக்கப்பட்டது. இதில் ராஜவீதி மற்றும் உக்கடம் பகுதி நடைபாதை வியாபாரிகள் பட்டியலும் அடங்கியுள்ளது. மேற்படி தீர்மானத்தின்படி அவர்களுக்கு குலுக்கல் முறையில் இடம் ஒதுக்கீடு செய்ய, 14-5-96-ஆம் நாள், அனைத்து உறுப்பினர்களுடன் ஆஜராகுமாறு சிறு வியாபாரிகள் சங்கச் செயலாளருக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டது. குறிப்பிட்ட தேதியில் சிலர் வருகை தந்து மற்ற உறுப்பினர்களுடன் கலந்தாலோசித்து மறுபடியும் வருகை தருவதாகச் சென்றவர்கள், மீண்டும் நேரில் வராமல், 27-5-96-ஆம் நாளன்று, மாநகராட்சி உயர்நீதிமன்ற உத்தரவின்படி செயல்படவில்லை என்று வக்கீல் நோட்டீசு அனுப்பியுள்ளனர். இது குறித்து மாநகராட்சி

உயர்நீதிமன்ற வழக்கறிஞருடன் கலந்தாலோசித்து மேல் நடவடிக்கை தொடரப்படும்.

திரு. கே. சுப்பராயன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மிகுந்த மன வருத்தத்தோடு இந்த அறிக்கையைப் பற்றிப் பேச விரும்புகிறேன். உண்மையிலேயே கவனத்திற்குக் கொண்டுவர வேண்டிய ஒரு பிரச்சினையை நான் அரசின் கவனத்திற்குக் கொடுத்திருக்கிறேன். அது கேள்விக்கு முன்னர் சொல்கின்ற சில பீடிகைகள், அவ்வளவுதான். இந்த விவர அறிக்கையில் உண்மையான விவரங்கள் மறைக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் அதிகாரிகள் அரசாங்கத்திற்கு உரியபடி விளக்கங்களைத் தராமல் இருக்கிறார்கள் என்பதற்கு இந்த விவர அறிக்கையே ஒரு சான்றாக எனக்குப் படுகிறது. ஏனென்றால், சொல்லப்படுகின்ற விஷயம் முழுமையான உண்மையல்ல. குலுக்கல் முறையில் இடம் ஒதுக்கீடு செய்யுமாறு சென்னை உயர்நீதிமன்றம் மாநகராட்சியைக் கோரவில்லை. குறிப்பாக உயர்நீதிமன்றம் கொடுத்திருக்கக்கூடிய டயரக்ஷனில் சொல்லப்பட்டிருக்கிறது. நடைபாதை சிறு வியாபாரம் என்பது ஐரோப்பிய நாடுகளிலேகூட ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிற ஒரு நெறிமுறையாகும், லண்டன் போன்ற பெரிய நகரிலேகூட குறிப்பிட்ட மணி நேரத்தில் டிராஃபிக் நிறுத்தப்பட்டு, நடைபாதையில், சிறு வியாபாரம் செய்து கொள்வது என்பது அடிப்படை உரிமை என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது, ஏனென்றால், வேலைவாய்ப்பை அளிப்பதற்கு அரசாங்கம் தவறுகிற இன்றைய சூழ்நிலையில் அவர்களே சுயமாகக் கஷ்டப்பட்டுத் தேடிக்கொள்கிற வேலைக்கு அரசு இடையூறு செய்யக்கூடாது என்கிற சமூகநீதி கண்ணோட்டத்தோடுதான், இந்த நடைபாதை சிறு வியாபாரத்தைப் பார்க்க வேண்டும் என்று உச்சநீதிமன்றமே சமீபத்தில் ஒரு தீர்ப்பளித்திருக்கிறது.

முற்பகல் 10-45

எனவேதான், உச்சநீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையிலேயும், உயர்நீதிமன்ற ஆணையின் அடிப்படையிலேயும் இதுவரையிலும் அங்கே வியாபாரம் செய்து வந்தவர்களுக்கு அவர்கள் வியாபாரம் செய்து கொள்கிற உரிமத்தை வழங்கவேண்டும் என்று உயர்நீதிமன்றம் ஆணையிட்டும்கூட, மாநகராட்சியும் கோவை மாநகர காவல்துறையும்--இந்த இடத்திலேதான் நான் வினா தொடுப்பதற்கு

1996 ஆகஸ்ட் 10] [திரு. கே. சுப்பராயன்]

முன்னர் விளக்கம் சொல்ல விரும்புவது--இந்த நிலை ஏன் வந்தது என்றால், அந்த சிறு வியாபாரிகள், கடை போட்டு வியாபாரம் செய்கிறவர்கள், ஒரு துணியை விரித்து, எங்காவது கடும் வட்டிக்கு கடன் வாங்கி, காலையிலே தொடங்கி மாலை நேரத்திற்குள் ஒரு வியாபாரத்தை முடித்து, அதில் வருகிற வருமானத்தின் ஒரு பகுதியை தாங்கள் எடுத்துக்கொண்டு, பிறிதொரு பகுதியை, கடுமையான வட்டிக்குக் கொடுத்துவிட்டு மூன்று நேரமும் வயிற்றைக் கழுவுவதற்கு நாய் படாதபாடு படுகிற அந்த ஏழைப்பட்ட மக்களை பிணந்தின்னிக் கழுகு பிணத்தைக் குதறுகிற மாதிரி-- பணம் தின்னிக் கழுகுகளாகத்தான் காவல்துறை அவர்களிடம் செயல்பட்டு வந்தது கடந்த காலங்களில்--அந்தச்செயல்பாட்டிலிருந்து தங்களைத் தப்பவைத்துக் கொள்வதற்காக, விடுவித்துக்கொள்ள வைப்பதற்காக, சங்கம் அமைத்து உயர்நீதிமன்றத்தை நாடி பாதுகாப்பு தேட முயன்றிருக்கிறார்கள். மாமூல் கொடுப்பதிலேயிருந்து தப்பித்துக் கொண்ட இவர்களைத் தண்டிக்க வேண்டும் என்கிற வஞ்சம் நிறைந்த உள்நோக்கத்தோடுதான் காவல் துறையும், மாநகராட்சியும் திட்டமிட்டு கூட்டுச் சதி புரிந்து தவறான தகவல்களை இந்த அவைக்குத் தந்திருக்கின்றன. எனவேதான், உண்மையில் பல்வேறு விஷயங்களைப் புரிந்து அவற்றை மிக விரைவில் தீர்த்து வைப்பதற்குரிய வகையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அவையில் இருக்கிற இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புவது, ஏறத்தாழ 900 பேர்கள் சம்பந்தப்பட்ட இந்த விஷயத்தில் தற்போது இவர்கள் நடைபாதையில் சிறு வியாபாரம் செய்வதைத் தடுத்து இந்த மாநகராட்சி, ஆளே இல்லாத புதிய இடங்களுக்கு ஒதுக்கித் தள்ளி அவர்களை வியாபாரம் செய்யமுடியாமல் தடுக்கின்ற ஒரு முயற்சியினை மேற்கொள்கிறார்கள், தண்டிக்கிறார்கள். வேட்டையாடுகிற அந்தப் புலிகளிடமிருந்து தப்பி வருகிற மான்கள் மாதிரி, இந்த கோவை மாநகராட்சி நடைபாதை சிறு வியாபாரிகள் இருக்கிறார்கள். அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கின்ற முறையில், போலீஸூம் உள்ளாட்சித் துறையும் அவர்களுக்கு எதிராகத் தலையிடுவதால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் இந்த அவையில் இருக்கின்ற இந்த நேரத்தில் பணிந்து கேட்டுக் கொள்ள விரும்புவது, அவர்களுக்கு உரிமத்தை வழங்கி யாரும் அவர்களுக்கு இடையூறு செய்யக்கூடாது என்பதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

[1996 ஆகஸ்ட் 10

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன் அவர்கள் துணைக் கேள்வி வைப்பார் என்று ஏராளமான விவரங்களை வைத்திருக்கிறேன். ஆனால், ஆரம்பிக்கிறபோதே முழுமையும் தவறான தகவல்கள், மறைத்துக் கொடுக்கிறார்கள், அதிகாரிகள் கொடுப்பது சரியில்லை என்று அவர் சொன்னதன் பேரில், இது அதிகாரிகள் கொடுத்திருக்கிற தகவல்கள். ஆகையினாலே மீண்டும் அதை நான் அவர்களுக்குச் சொல்ல விரும்பவில்லை. உயர்நீதிமன்றத்தால் அளித்த தீர்ப்பு--ஏனென்றால் நேற்றைக்கு முன்தினம் டிமாண்டிற்காக நான் அதிகமான விவரங்களைச் சேகரித்துக் கொண்டிருக்கும்போது கேட்டிருக்கிறேன்--அது நாளை மறுநாள் வரும். அந்தத் தீர்ப்பையும் வைத்து அவர்களையும் நேரிடையாக வைத்துப் பேசி நாமே ஒரு முடிவு எடுத்து-- இதில் கோவை மாநகராட்சி மட்டும் முடிவு எடுப்பதல்ல, போக்குவரத்தைச் சரிப்படுத்துகிற காவல்துறையினரும் தலையிட வேண்டியிருக்கிறது-- அவர்கள் அங்கே பல இடங்களைப் பார்க்க வேண்டும் என்று என்னிடத்தில் கேட்டிருக்கிறார்கள். அதன் அடிப்படையிலேதான் நானும் சட்டமன்றம் முடிந்தபிறகு வருகிறேன் என்று சொல்லியிருக்கிறேன். சற்று காலதாமதம் ஆகிவிட்டால்கூட நேரிடையாக உறுப்பினரை வைத்துக்கொண்டு, அதிகாரிகளை வைத்துக் கொண்டு, எப்படி இதைச் சீர் செய்ய முடியுமோ அதைச் செய்வதை நான் இங்கே ஏற்றுக் கொள்கிறேன்.

திரு. கே. சுப்பராயன்: பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே வரிதான். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த விஷயத்தில் கொஞ்சம் சிறப்புக் கவனம் செலுத்த வேண்டும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். காவல்துறை இந்தப் பிரச்சினைக்குப் பின்னரும், எங்களிடமிருந்து நீங்கள் தப்பி எங்கு சென்றாலும், இந்த இடத்தில் நீங்கள் வியாபாரம் செய்ய முடியாது என்று பகிரங்கமாகச் சவால் விட்டிருக்கிறார்கள். எனவே, அவற்றை மட்டும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு தங்கள் மூலம் தெரிவிக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கவனம் செலுத்தவில்லை என்பது போலவும், முதலமைச்சர் சிறப்புக் கவனம் செலுத்த வேண்டும் என்பது போலவும் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன் அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

1996 ஆகஸ்ட் 10] [கலைஞர் மு. கருணாநிதி]

அது சரியல்ல. அவர் கவனம் செலுத்துவதும், நான் கவனம் செலுத்துவதும் ஒரு கூட்டுமுயற்சிதான். இந்த அமைச்சரவையில் யார் கவனம் செலுத்தினாலும் அது ஒரு கூட்டுமுயற்சிதான். கோவையிலே மாத்திரமல்ல, பல பகுதிகளில் இந்த நடைபாதைக் கடைகளுக்கும் போக்குவரத்திற்கும் இடையிலே பல தகராறுகள் ஏற்பட்டுக்கொண்டே இருக்கின்றன. சில இடங்களில் காவல்துறையினர் நடைபாதை வியாபாரிகளை அதிகத் துன்பத்துக்கு உள்ளாக்குகிறார்கள் என்பதும் தெரிகிறது. சில இடங்களில் கட்டுப்பாட்டை மீறி, வரையறுக்கப்பட்ட நிலைகளுக்கு மாறாக நடைபாதை வியாபாரிகளும் நடந்துகொள்கிறார்கள். எனவே, நிச்சயமாக இரண்டையும் ஒருங்கே சேர்த்து உட்கார்ந்து பேசி, நல்ல முடிவு காண அரசு தயாராக இருக்கின்றது. அதுவரையில் காவல் துறையின் மூலமாக எந்தச் சங்கடமும் வராமல் இருக்க காவல் துறைக்கும் இந்த அவையின் மூலமாக நான் எச்சரிக்கை விடுக்கிறேன்.

முற்பகல் *10–50*

(ஆ) கன்னியாகுமரி மாவட்ட கடலோர வீடுகள் பல கடல் கொந்தளிப்பால் பாதிக்கப்பட்டுள்ளமை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. டி. மணி, திரு. இரா. பொன்னார்டு, திரு. அ.வ. அப்துல் நாசர், திரு. இரா. தாமரைக்கனி, டாக்டர் தே. குமாரதாஸ், திரு. சி. ஞானசேகரன் ஆகியோர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிகழ்வினை மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். அவர்கள் ஆறு பேரில் ஒருவர் முதலில் பேசினால் போதும் என்று கருதுகிறேன். எனவே, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. மணி அவர்களை அழைக்கின்றேன்.

***திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கன்னியாகுமரி மாவட்ட கடலோர கிராமப் பகுதிகளில் கடல் கொந்தளிப்பால் பல வீடுகள் முழுமையாக பாதிக்கப்பட்டதால் அப்பகுதி மீனவ மக்களிடையே ஏற்பட்டுள்ள நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.